# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 10.02.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சூரா ஃபாத்திஹா, நாம் ஒவ்வொரு தொழுகையிலும் ஓதக்கூடிய ஒரு அதிகாரம் ஆகும். நபிமொழிகளில் இதற்கு பல பெயர்களும், மேன்மைகளும் கூறப்பட்டுள்ளன. ஓர் அறிவிப்பில் இதற்கு சூரத்துல் ஸலாத் என்றும் வந்துள்ளது.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நான் ஸலாத்தை அதாவது சூரா ஃபாத்திஹாவை எனக்கும் அடியானுக்கும் பாதி பாதியாகப் பிரித்துள்ளேன். அதாவது இந்த சூராவின் பாதி பகுதியில் இறைபண்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் பிற பாதி பகுதியில் அடியானுக்கு வேண்டிய துஆக்கள் கூறப்பட்டுள்ளன.

எனவே இதுதான் இதன் முக்கியத்துவமாகும். தொழக்கூடிய ஒவ்வொருவரும் எப்பொழுதும் இதனை கண் முன் நிறுத்த வேண்டும். அல்லாஹ்வுடைய பண்புகளின் மீதும் கவனம் செலுத்தியவாறு அதிக அளவு அதிலிருந்து பலன் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் இதில் கூறப்பட்டுள்ள துஆக்களின் பக்கமும் கவனம் செலுத்தி, அந்த துஆவிலிருந்து பயன் பெறுவதற்கு ஒவ்வொரு தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் மிகவும் கவனத்துடன் ஓத வேண்டும். இதேபோன்று இந்த விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலமாகிய இந்தக் காலத்துடன் இந்த அதிகாரத்திற்கு அதிக தொடர்பு உள்ளது.

பழைய வேதங்களிலும் இதனைப் பற்றி கூறப்பட்டுள்ளது. சூரா ஃபாத்திஹா உடைய கருத்துகளும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தின் அருட்கள், அதனைப் பெறுவது, மேலும் இக்காலத்தின் தீமைகள், வழிகேட்டிலிருந்து தவிர்ந்திருப்பது போன்றவற்றின் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. எனவே இந்த வகையில் இன்றைய காலத்து முஸ்லிம்கள் மத்தியில் இதற்கு மிகப்பெரிய முக்கியத்துவம் இருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக முஸ்லிம் உலமாக்கள் சமுதாயத்தை எந்த அளவு தன்வசப்படுத்தியுள்ளார்கள் என்றால் மேலும் எந்த அளவு அவர்களுடைய சிந்திக்கும் திறனை அழித்து விட்டார்கள் என்றால், பெரும்பான்மையானவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கு தயாராகவே இல்லை. இதன் காரணமாக முஸ்லிம்கள் இதனை சிந்திப்பதே இல்லை. ஆனால் அல்லாஹ்வின் அருளால் சிந்தனை செய்யக்கூடிய, கவனம் செலுத்தக்கூடிய, மஸீஹ் மற்றும் மஹ்தியின் அவசியத்தைப் புரியக்கூடிய ஒரு கூட்டமும் உள்ளது.

எனவே இந்த மவ்லவிகளின் கைகளில் உள்ள இந்த மக்களை, இந்த பெயர் தாங்கி உலமாக்களும், மவ்லவிகளும், தீமை மற்றும் வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்கின்றனர். வேதனையுள்ள உள்ளம் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் இந்த விஷயத்தை வெளிப்படுத்துகின்றனர். அதாவது தீமைகள், இணை வைத்தல் மற்றும் வழிகேட்டிற்கான காலம் நடந்து கொண்டிருக்கிறது. மேலும் இது எல்லா இடங்களிலும் பரவுவதை நம்மால் பார்க்க முடிகிறது. இதனை விலக்குவதற்கு இறைவனுடைய சிறப்புமிகு அடியார் தோன்றுவது அவசியமாகும்.

இந்த உணர்வு இவர்களிடம் இருக்கத்தான் செய்கிறது. இவர்கள் அந்த அடியார் வந்து விட்டாரா என தேடவும் வேண்டும். நிச்சயமாக இறைவனுடைய அந்த சிறப்புமிகு அடியார் தோன்றி விட்டார். ஆனால் நான்

கூறியது போன்று பெரும்பாலார் உலமாக்களின் பின்னால் சென்றவாறு அவரை ஏற்க மறுக்கின்றனர் அல்லது பயத்தினால் ஏற்க மறுக்கின்றனர்.

எனவே உலமாக்களும் மக்களும் இறைவன் புறமிருந்து நேர்வழியினை நாட வேண்டும். தனது பிடிவாதத்தினை விட்டு விட வேண்டும்.

எவ்வாறிருப்பினும், நமது பணி, தூதுச் செய்தியினை எட்ட வைப்பதாகும். இன்ஷா அல்லாஹ் நாம் அதனை எட்ட வைத்துக் கொண்டே செல்வோம். நமது பணியை செய்து கொண்டே செல்வோம். ஆனால் இதனால் அஹ்மதிகளாகிய நாம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பருடன் தொடர்புடைய நாம் நமது அறிவு மற்றும் ஞானத்தினை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சூரா ஃபாத்திஹாவுடைய கருத்துக்களிலிருந்து அதிக அளவு பயன் அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த அதிகாரத்தை தமது நூல்களில் பல்வேறு இடங்களில் கூறியுள்ளார்கள். இதனுடைய கருத்துக்களை மிகத் தெளிவாக நம்முன் திறந்து வைத்துள்ளார்கள். நிச்சயமாக இவை, இதனைப் புரிவதன் பக்கம் கவனம் செலுத்துவதற்கான பொறுப்பை நம்மீது சுமத்துகின்றது. இதன் அறிவைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் நாம் இந்தக் கருத்துக்களைப் புரிந்தவாறு பலன் பெற வேண்டும்.

தற்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வார்த்தைகளில், சூரா ஃபாத்திஹாவின் இரண்டாவது வசனமான பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்–க்கு அடுத்து வரக்கூடிய அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் என்ற வசனத்தின் விளக்கங்களை அன்னாருடைய மேற்கோள்களிலிருந்து எடுத்துக் கூறுவேன். அன்னார் இந்த வசனத்தில் அடங்கியுள்ள பல்வேறு கருத்துக்களை, பல்வேறு கோணங்களில் எடுத்துரைத்துள்ளார்கள். அதில் நான் ஒரு சில மேற்கோள்களை மட்டுமே எடுத்துள்ளேன். இவை, இந்த வசனத்தைப் பற்றி சுட்டிக் காட்டிய அன்னாரின் அறிவு மற்றும் ஆன்மீக பொக்கிஷத்தின் ஒரு சில விஷயங்களே ஆகும். இதனை தவிர இந்த வசனத்திற்கு எண்ணற்ற மேற்கோள்கள் உள்ளன. நிச்சயமாக இதனைப் படிப்பதன் மூலமும், கேட்பதன் மூலமும் அறிவு மற்றும் ஞானம் வளர்கிறது. ஆனால் ஒரு தடவை படிப்பதால் மட்டும் மனிதன் அதன் ஆழமான விளக்கம் வரை சென்று விட முடியாது. மேலும் அதுவரை செல்வது சாத்தியமற்ற ஒன்றாகும். இதை சரியாகப் புரிந்து கொள்வதற்கு நாமும் நூல்களைப் படிக்க வேண்டும். அப்போதுதான் நாம் இக்காலத்தின் இமாமுடைய ஆன்மீக பொக்கிஷத்தைப் பற்றிய சரியான அறிவைப் பெற முடியும். மேலும் அதிலிருந்து பலன்பெற முடியும்.

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் –ஐப் பற்றிய சிறிய விளக்கத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்ஹம்துலில்லாஹ்; எல்லாப் புகழும் இந்த உண்மையான வணக்கத்திற்குரிய அனைத்துப் பண்புகளின் முழுமையானவனுக்கே உரியது என நிரூபணமாகிறது. அதாவது எல்லாப் புகழும், போற்றுதலும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவனிடம் அனைத்துப் பண்புகளும் ஒன்றிணைந்துள்ளன. மேலும் அல்லாஹ்விடம் மட்டுமே இந்தப் பண்புகள் அனைத்தும் முழுமையான முறையில் தென்பட முடியும்.

கூறுகின்றார்கள்: ஹம்து அனைத்து பணிகளின் முழுமையானவனுக்கு உரியதாகும். அவனது பெயர் அல்லாஹ் ஆகும்.

நாம் இதற்கு முன்னரும் கூறியுள்ளோம். திருக்குர்ஆனின் மரபுப்படி அல்லாஹ் என்பது உண்மையான வணக்கத்திற்குரியவனும், அனைத்துப் பண்புகளிலும் முழுமையானவனும், எந்தவித குறைபாடும் இல்லாத தூய்மையான அந்த இறைவனின் பெயர் ஆகும்.

அவன் எல்லா விதமான பண்புகளின் தொகுப்பு ஆவான். அனைத்து விதமான குறைபாடு, பலவீனம், தகாதவற்றிலிருந்து அவன் தூய்மையானவன் ஆவான். அவன் ஒருவன் ஆவான். இணையற்றவன் ஆவான். அவன் நன்மைகளின் ஊற்று ஆவான். எல்லா விதமான பலன்களும் அவனிடமிருந்தே பிறக்கின்றன.

ஏனென்றால், இறைவன் தனது தூய வேத நூலாகிய திருக்குர்ஆனில் தனது பெயராகிய அல்லாஹ்வை மற்ற அனைத்துப் பண்புகளின் தொகுப்பாக கூறியுள்ளான். அதாவது அல்லாஹ்வின் அனைத்துப் பண்புகளும் இதில் அடங்கி விட்டன என்பதாகும். அல்லாஹ் என்ற ஒரு பெயரில் அல்லாஹ்வின் மற்ற அனைத்து பண்புப் பெயர்களும் அடங்கியுள்ளன. எந்த இடத்திலும், மற்ற எந்தப் பெயருக்கும் இவ்வளவு மேன்மையை வழங்கவில்லை. முழுமையான பண்புகளின் தொகுப்பாக அவன் உள்ளதால், அதாவது முழுமையான முறையில் அனைத்துப் பண்புகளையும் கொண்டதினால் அல்லாஹ் என்ற இந்தப் பெயர் மற்ற அனைத்துப் பண்புகளுக்கும் சான்றாக விளங்குகிறது.

ஏனென்றால், அவன் அனைத்துப் பெயர்களுடன், பண்புகளின் தொகுப்பு ஆவான். எனவே இதன் கருத்து, அவன் அனைத்து முழுமையான பண்புகளை உடையவன் ஆவான் என்பதாகும்.

அல்லாஹ்வுடைய பெயரில், அல்லாஹ் என்ற வார்த்தையில் எல்லா விதமான பண்புகளும் முழுமையான முறையில் ஒன்றிணைந்துள்ளன.

கூறுகின்றார்கள்: எனவே அல்ஹம்துலில்லாஹ் உடைய அர்த்தத்தின் சாராம்சம் என்னவென்றால், புகழுரையின் எல்லா வகைகளும், அவை வெளிப்படையான புகழ்ச்சியாயினும், மறைமுகமான புகழ்ச்சியாயினும், தனிச் சிறப்புகளைக் கொண்டவையாயினும், இயற்கை அற்புதங்களைக் கொண்டவையாயினும் அவை யாவும் அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமானவையாகும். இதில் வேறெவரும் இணையில்லை. மேலும் ஓர் அறிவாளியின் அறிவு எத்தனை உண்மையான புகழுரைகள் மற்றும் முழுமையான மேன்மைகளை சிந்திக்க முடியுமோ, அதாவது அறிவுள்ளவர்கள் சிந்திக்கக்கூடிய எல்லை அளவு புகழும், முழுமையான மேன்மையும் எவ்வளவு உயர்வாக தோன்ற முடியுமோ, அல்லது சிந்தனையாளரின் சிந்தனையில் தோன்ற முடியுமோ அவை அனைத்தும் அல்லாஹ்விடம் உள்ளது. மேலும் (மனித) அறிவு, இறைவனிடம் இல்லாத ஒரு சிறப்பும் உண்டு என்று சாட்சியளித்து, துரதிஷ்டமான மனிதரைப் போன்று அந்த சிறப்புகளிலிருந்து அல்லாஹ் பேரிழந்தவன் ஆவான் என்று ஒருபோதும் கூறவே முடியாது. இது சாத்தியமற்ற ஒன்றாகும். அதாவது மனிதனுடைய அறிவு இந்த சிறப்பம்சம் ஒன்று உள்ளது. ஆனால் அல்லாஹ் துரதிஷ்டவசமான மனிதனைப் போன்று அதை இழந்து இருக்கிறான் என்று ஒருபோதும் கூறவே முடியாது.

கூறுகின்றார்கள்: எந்த அறிவாளியும் இறைவனிடம் தென்படாத எந்த மேன்மையையும் எடுத்துக் கூறவே முடியாது. மனிதனுடைய சிந்தனை எல்லைக்குட்பட்டதாகும். அவனால் அதுவரை செல்ல முடியாது. அந்தப் பண்புகளை மனித அறிவால் சூழ்ந்து கொள்ள முடியாது.

கூறுகின்றார்கள்: மனிதனால் எந்த அளவு சிறப்புகளை சிந்திக்க முடியுமோ அவை அனைத்தும் அவனிடம் இருக்கின்றன. இறைவன் தன்னிலும், தனது பண்புகளிலும் புகழ்ச்சிகளிலும் முழுமைத்தன்மையையும் பெற்றவனாவான். மேலும் அவன் எல்லாவித அசுத்தங்களிலிருந்தும் முற்றிலும் தூயவனாவான். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளார்கள். அதில் இதுவும் வருகிறது. அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள்: நான் அறிந்துள்ள உனது பெயரின் உனது பண்பிலிருந்து நன்மையை நாடுகின்றேன். அதன் தீமையிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன். மேலும் நான் அறியாத உனது பெயரின் உனது பண்பிலிருந்து நன்மையை நாடுகின்றேன். அதன் தீமையிலிருந்து பாதுகாப்புத் தேடுகின்றேன்.

எனவே மனிதனால் இறைவனுடைய பெயர்களையும் பண்புகளையும் அளக்கவே முடியாது.

அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் உடைய இந்த சிறிய விளக்கத்திற்குப் பிறகு அல்ஹம்து உடைய அர்த்தங்களை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

புகழுக்கு உரிமையுடைய ஒருவர் செய்த நல்ல காரியத்திற்காக செய்யப்படும் புகழுரை அல்ஹம்து என்று அழைக்கப்படுகிறது என்பதை நன்றாக புரிந்து கொள்ளுங்கள். மேலும் தன் விருப்பப்படி ஒருவர் மீது அருள்புரிந்து அந்த அருட்கொடையைப் பெற்றவர் செய்யும் புகழுரைக்கு பெயராகும். மேலும் தனது விருப்பத்திற்கேற்ப கருணை காட்டுபவனை புகழ்வதன் பெயராகும். தனது விருப்பத்திற்கு ஏற்ப வெகுமதி வழங்குபவரது புகழ் தான் போற்றப்படும். மேலும் இறைவனது விருப்பத்திற்கேற்ப கருணை காட்டுபவரது புகழ் பாடப்படும். ஏனெனில் இறைவனது விருப்பமே செல்லுபடியாகிறது.

உண்மையான புகழ் அனைத்தும் எல்லா விதமான பலன் மற்றும் ஒளியின் உறைவிடமாக உள்ளவனுக்கே உரியதாகும். மேலும் நன்றாக தெரிந்து உணர்ந்து ஒருவர் மீது கருணை புரிபவனுக்கே உரியதாகும். அறியாமையினாலும், எந்தவித நிர்பந்தத்தினாலும் செய்யாமல் எல்லாவற்றையும் அறிந்தவாறு, பார்த்தவாறு, எல்லாவற்றையும் நன்கு அறிந்து கருணை புரிபவனுக்கே புகழ் அனைத்தும் உரியது. அறியாமையினாலோ எந்தவிதமான நிர்பந்தத்தினாலோ அவன் செய்யவில்லை.

ஹம்து என்பதன் பொருள், அனைத்தையும் அறியக்கூடியவனும், பார்க்கக் கூடியவனும் ஆகிய இறைவனிடம் மட்டுமே காணப்படுகிறது. அவனே கருணையாளன் ஆவான். ஆரம்பம் முதல் முடிவு வரை எல்லா விதமான கருணையும் அவன் புறமிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவன் அல்லாத ஏனையவற்றைப் புகழக்கூடிய எல்லா விதமான புகழும் அவனுக்கே உரியது.

அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை புகழக்கூடிய ஒவ்வொரு புகழ்ச்சியும் அல்லாஹ்வின் காரணமாகவே புகழப்படுகின்றது. அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களைப் புகழ்வது, அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட சிறப்புகள் மற்றும் பண்புகளினால் புகழப்படுகின்றது. அல்லாஹ் அவர்களிடம் ஏற்படுத்திய சிறப்பு அம்சங்களின் காரணமாக நல்ல செயல்களின் காரணமாகவே புகழப்படுகின்றது. இறைப் பண்புகளைப் பிரதிபலித்ததன் காரணமாக, ரஹ்மானிய்யத் ரஹீமிய்யத் போன்ற பண்புகள் அவனிடம் விளைவை ஏற்படுத்தியதன் காரணமாக அவனை இதற்கு தகுதியானவனாக ஆக்கி, ஒருவருக்கு உதவி புரிந்து பிறகு புகழ்ச்சிக்கு தகுதி பெறுகிறார். எனவே உலகில் மனிதன் செய்யக்கூடிய ஒவ்வொரு நற்செயலும், இறைவனால் வழங்கப்பட்ட நல்வாய்ப்பின் அடிப்படையில் தான் செய்ய முடியும். எனவே இறுதியில் அதற்கான புகழ்ச்சி இறைவனையே சென்றடைகிறது.

மேலும் இதுபற்றி கூறுகின்றார்கள்: வல்லமை மற்றும் மகிமை வாய்ந்தவனின் நல்ல செயலின் காரணமாக அவனை கண்ணியம் மற்றும் மேன்மைப்படுத்துவதற்காக வாயினால் கூறப்படும் புகழ்ச்சி ஹம்து என்று அழைக்கப்படுகிறது. முழுமையான ஹம்து அனைத்தும் வல்லமை வாய்ந்த இறைவனுக்கே உரியதாகும். எல்லா விதமான புகழ்ச்சியின் உறைவிடமும், சிறிதாயினும் பெரியதாயினும் அது நமது இறைவனே ஆவான். அவன் வழிதவறியவர்களுக்கு நேர்வழி காட்டக்கூடியவனும், அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு கண்ணியம் அளிக்கக்கூடியவன் ஆவான். அவன் மஹ்மூதுகளுக்கெல்லாம் மஹ்மூத் ஆவான். அதாவது புகழுக்கு உரியவை அனைத்தும் அவனைப் புகழ்வதில் ஈடுபட்டுள்ளன.

நான் கூறியது போன்று அனைத்தும் அவனிடமே திரும்புகிறது.

இங்கு கூறுகின்றார்கள்: அவன் வழிதவறியவர்களுக்கு நேர்வழி வழங்குகிறான். வழிதவறியவனுக்கு ஹிதாயத் வழங்கும் போது ஹிதாயத்தைப் பெற்றவன் இதனால் இறைவன் பக்கம் குனிகிறான். அவனை புகழ்வான். உலகத்தின் பார்வையில் அற்பமானவர்களாக கருதப்படுபவர்கள் அல்லாஹ்விடம் கண்ணியம் பெறுகிறார்கள். நபிமார்களின் எதிரிகளின் வழிமுறை எவ்வாறு இருந்ததென்றால், நாங்கள் உங்களை ஏற்றுக் கொண்டவர்களை இழிவானவர்களாக காண்கிறோம் என்று கூறினர். ஆனால் இறைவன் ஒரு காலகட்டத்தில் நிலைமையை எவ்வாறு மாற்றுகிறான் என்றால், ஃபிர்அவ்ன போன்றோர் இறுதியில் உயிர் பிச்சை கேட்டனர்.

மக்காவின் தலைவர்கள் தனது உயிருக்கு பாதுகாப்பு கேட்டனர். இதுபோன்ற விஷயங்கள் உண்மையான மூஃமின்களக்கு உண்மையான ஹம்தின் பக்கம் கவனமூட்டுகிறது. அதனைப் பற்றிய அறிவை வழங்குகின்றது.

இதனைப் போன்று இன்றைய காலத்திலும், இவர்கள் இழிவானவர்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவித கண்ணியமும் கிடையாது. இவர்கள் ஏளனத்திற்கு உரியவர்கள். எனவே நாம் இவர்களை இப்படி ஆக்கி விடுவோம்; அப்படி செய்து விடுவோம் என்று கூறுகின்றனர்.

ஆனால் இறைவன் ஒருபுறம் தனது வல்லமையை உடனுக்குடன் வெளிப்படுத்துகின்றான். மேலும் ஒரு காலகட்டம் வரும். அப்போது இவர்கள் அழிந்து போய் விடுவார்கள்.

இதனுடைய சாராம்சம் என்னவென்றால், அல்லாஹ் முழுமையான புகழப்படுபவன் ஆவான். மேலும் முழுமையான புகழுக்குரியவன் ஆவான். அல்லாஹ்வுடைய ஹம்து தான் அனைத்து கண்ணியத்தின் ஊற்றாகும். ஒரு மூஃமின் உடைய பணி என்னவென்றால் அல்லாஹ்வின் புகழ்ச்சியின் அறிவைப் பெற்று அல்லாஹ்வின் பாதுகாப்பில் வர வேண்டும்.

ஹம்து என்ற வார்த்தைக்கு மேலும் விளக்கமளித்தவாறு, அல்லாஹ் திருக்குர்ஆனை ஹம்து என்ற சொல்லைக் கொண்டு ஆரம்பித்தான்; இதில் என்ன ஞானம் இருக்கிறது? என்பதனைப் பற்றி எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்.

அல்லாஹ் நமது வேதத்தை போற்றுதல், நன்றி போன்றவற்றிலிருந்து தொடங்காமல் ஹம்து என்ற சொல்லைக் கொண்டு தொடங்கியிருக்கின்றான். ஏனென்றால் ஹம்து என்ற வார்த்தை மேற்கூறப்பட்ட இரண்டு வார்த்தைகளின் பொருளையும் உள்ளடக்கியுள்ளது. இந்த சொல் அவற்றின் இடத்தை வகிக்கிறது. ஆனால் இதில் சீர்திருத்தம், புகழ்ச்சி, போற்றுதல் போன்றவை அவற்றை விட அதிகமாக உள்ளது. அழகும், நேர்த்தியும் அடங்கியுள்ளது. சீர்திருத்தமும் இருக்கின்றது. ஏனென்றால் நிராகரிப்பாளர்கள் காரணமே இல்லாமல் சிலைகளைப் புகழ்ந்து வந்தனர். அவர்கள் அவைகளை புகழ்வதற்கு ஹம்து என்ற வார்த்தையை உபயோகித்து வந்தனர். மேலும் அந்த கடவுள்கள் எல்லா விதமான அருள்களின் வெகுமதிகளின் ஊற்று என நம்பிக்கைக் கொண்டிருந்தனர். மேலும் வள்ளல்கள் என நினைத்தனர். இதனைப் போன்றே மரணத்தின் போது ஒப்பாரி வைக்கும் பெண்கள் மேன்மையை எடுத்துரைக்கும் போதும், போர்களின் போதும், விருந்தோம்பலின்போதும் உணவளிப்பவனாகிய, பாதுகாவலனாகிய அல்லாஹ்வைப் புகழ்வதைப் போல் அவைகளை புகழ்ந்து வந்தனர். எனவே அல்ஹம்து லில்லாஹ் என்பது இப்படிப்பட்ட மக்கள் மற்றும் அனைத்து முஷ்ரிக்களுக்கும் இது ஒரு மறுப்பு ஆகும். மேலும் சிந்தனை செய்யக்கூடியவர்களுக்கு இதில் அறிவுரையும் உள்ளது. மேலும் இந்த வார்த்தையில் அல்லாஹ் சிலை வணங்கிகள், யூதர்கள், கிறித்தவர்கள் மற்றும் அனைத்து முஷ்ரிக்குகளையும் எச்சரிக்கை செய்கிறான்.

மேலும் நீங்கள் உங்களுடைய பொய்க் கடவுள்களை ஏன் புகழ்கின்றீர்கள்? உங்களுடைய பெரியவர்களின் புகழை ஏன் மிகைப்படுத்திக் கூறுகின்றீர்கள்? அவர்கள் உங்களுடைய ரப் ஆவார்களா? இவர்களா உங்களையும் உங்களது சந்ததிகளையும் பரிபாலித்தார்கள்? இவர்கள் உங்கள் மீது கருணை காட்டக் கூடியவர்களா? இவர்கள் உங்களுடைய கஷ்டங்களை போக்கினார்களா? இவர்களா உங்களுடைய துக்கங்களையும் துயரங்களையும் தூர விலக்கினார்கள்? அல்லது இவர்கள் உங்களுக்கு கிடைத்த நன்மையைப் பாதுகாத்தார்களா? அல்லது உங்களிடம் உள்ள கஷ்டங்கள் என்ற அசுத்தத்தை துடைத்தார்களா? உங்களது நோய்க்கு நிவாரணம் அளித்தார்களா? இவர்கள் தீர்ப்பு நாளின் எஜமானர்களா? இல்லை. அல்லாஹ் தான் மகிழ்ச்சியை முழுமைப் படுத்தக்கூடியவன்; ஹிதாயத்திற்கான காரணிகளை ஏற்படுத்தக் கூடியவன். துஆக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவன்; எதிரிகளிடமிருந்து பாதுகாத்து உங்கள் மீது கருணை செலுத்தக் கூடியவனும், பரிபாலிப்பவனும் ஆவான். அல்லாஹ் நல்லவர்களுக்கு நிச்சயமாக நற்கூலி வழங்குவான்.

நமது இறைவன் முழுமையான இறைவன் ஆவான். மேலும் எல்லா விதமான முழுமையான பண்புகளும், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. மேலும் அவனே அவைகளின் உறைவிடமானவன் என்பதனை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்.

இதனுடன் அல்ஹம்து லில்லாஹ்வில் இந்த அம்சமும் அடங்கப் பெற்றுள்ளது. அதாவது இறைவனைப் பற்றிய ஞானத்தில் தனது தீய நடத்தையினால் அழிந்தார் எனில் அல்லது அல்லாஹ்வைத் தவிர மற்றொன்றை கடவுளாக ஆக்கிக் கொண்டனர் என்றால், அவர் இறைவனுடைய மேன்மையிலிருந்து கவனத்தை திருப்பியதன் விளைவாக அவனது அற்புதங்களை பார்க்காததன் விளைவாகவும் மேலும் இறைவனது மகிமை மற்றும் மேன்மை ஆகியவற்றை – பொய்த் தெய்வங்களை வணங்கக் கூடியவர்களைப் போன்று கவனம் செலுத்தாததன் காரணத்தினால் அழிந்து விட்டார் என்று புரிந்து கொள்ளுங்கள்.

இறைவனது ஞானத்தைப் பெறாத காரணத்தினால் அவர் அழிந்து விட்டார். அல்லாஹ்வுக்குப் பதிலாக மற்றொன்றை கடவுளாக ஆக்கிக் கொண்டார். மனிதனுக்கு இறைவனின் பண்புகளை கொடுத்து அவனை இறைவனாக்கிக் கொண்டார். இறைவனது அடையாளங்கள் அவனுக்கு முன்பு முழுமையாக வராமல், மறைந்து விட்டனவென்றால் அல்லது மற்றொன்றை அல்லாஹ்வுக்கு எதிராக கடவுளாக ஆக்கிக் கொண்டார் என்றால் அப்படிப்பட்ட மனிதரின் முடிவு அழிவு ஆகும்.

கூறுகின்றார்கள்: நீங்கள் கிறிஸ்தவர்களை பார்ப்பதில்லையா? அவர்களுக்கு தவ்ஹீதின் பக்கம் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்களை இதே நோய் தான் அழிவிற்கு உள்ளாக்கியது. அவர்களை வழிகெடுக்கக்கூடிய நஃப்ஸ், தவறு செய்யக் கூடிய ஆசைகளும் இந்த வழிகேடான பாதையினை அழகுபடுத்திக் காட்டியது. அவர்கள் ஒரு தாழ்மையான அடியானை கடவுளாக்கிக் கொண்டனர். வழிகேடு மற்றும் அறிவின்மையின் மதுவை அருந்தினார்கள். இறைவனது மேன்மை, அவனது தனிப்பண்புகளை மறந்து விட்டனர். அவனுக்கு மகன், மகள் போன்றவற்றை ஏற்படுத்தினர். ஒருவேளை அவர்கள் இறைவனது பண்புகள் மற்றும் கண்ணியத்தின் பக்கம் உற்றுநோக்கினார்கள் என்றால் அவர்களுடைய அறிவு தவறு செய்திருக்காது. அவர்கள் அழிவிற்குள்ளானவர்களாக ஆகியிருக்க மாட்டார்கள்.

எனவே இந்த இடத்தில் அல்லாஹ் இதன் பக்கம் கவனமூட்டியிருக்கின்றான். அதாவது இறை ஞானத்தினைப் பற்றிய விஷயங்களில் தவறுகள் நடைபெறாமல் தடுக்கக்கூடிய விதிமுறை என்னவென்றால் அவனது மேன்மையின் பக்கம் முழுமையாக கவனம் செலுத்த வேண்டும். மேலும் அவனுக்கேற்ற பண்புகளைத் தேட வேண்டும். அவனது பண்புகளை பற்றிய அறிவைப் பெற வேண்டும். அதனைத் தேட வேண்டும். அந்தப் பண்புகளை திரும்பத் திரும்ப நினைவு கூற வேண்டும். அவை ஒவ்வொரு பௌதீக பொருட்களிலிருந்து சிறந்ததாகும். அவன் தனது செயல்களின் மூலம் தனது பண்புகளை நிரூபித்துக் காட்டியுள்ளான். அதாவது அவனது ஆற்றல், அவனது சக்தி, அவனது வெற்றி, அவனது வள்ளல்தன்மை ஆகியவற்றை புரிந்து கொள்ள வேண்டும். இதுவே அவனுக்கு ஏற்ற புகழாகும். எனவே இந்த விஷயங்களை கவனத்தில் கொள்ளுங்கள். கவனமற்றவர்களாக இருக்காதீர்கள்.

மேலும் படைப்பாற்றல் (ருபூபிய்யத்) அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ரஹ்மானிய்யத் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். ரஹீமிய்யத் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். தீர்ப்புநாளின் அனைத்து அதிகாரமும் அல்லாஹ்வுக்கே உரியதாகும். எனவே மனிதனே! நீ உன்னை பரிபாலிப்பவனாகிய இறைவனுக்கு கட்டுப்படுவதற்கு மறுக்காதே. ஓர் இறைவனை வணங்கக்கூடிய முஸ்லிம்களில் ஒருவனாகி விடு!

பிறகு இந்த வசனத்தில் அல்லாஹ்தான் இதன் பக்கமும் கவனமூட்டுகின்றான். முதலில் அவனிடம் இருந்த பண்புகள் அழிந்து பிறகு வேறு புதிய பண்புகளை மேற்கொள்வதோ, தனது மகத்துவத்தில் மாற்றங்களை உண்டாக்கக் கூடியவனோ அல்லது அவனிடம் ஏதாவது குறைபாடுகள் உண்டாவதோ, குறைபாடுகள் ஏற்பட்ட பிறகு சிறப்புகள் பெறுவது ஆகியவற்றிலிருந்து தூய்மையானவன் ஆவான். அதாவது

எந்த வித குறைபாடும் அவனிடம் ஏற்பட முடியாது. எனவே இந்த சிறப்பும் அவனிடம் தோன்றி விட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை. அனைத்தும் சிறந்ததாகும். அவனிடம் முன்னதாக ஏதோ குறைபாடு இருந்தது. தற்போது மேன்மை வந்து விட்டது என்பது கிடையாது. மாறாக ஆரம்பம் முதல் முடிவு வரை வெளிப்படை, மறைவானவை ஆகியவற்றில் நிரந்தரமாக ஹம்துகள் நிரூபணமாகி விட்டது. எவரொருவர் இதற்கு மாற்றமாக கூறுவாரோ அவர் உண்மையை விட்டு விலகிய காஃபிர் ஆகி விட்டார்.

எனவே அல்லாஹ் அனைத்து குறைகளிலிருந்தும் தூய்மையானவன் ஆவான். எவரொருவர் அவனது பண்புகளைப் பற்றி சரியான ஞானம் பெற மாட்டாரோ அவர் அழிவின் குழியில் விழுகிறார். முன்பிருந்த சமுதாயங்களின் அழிவு இதனால்தான் ஏற்பட்டது. அவர்கள் இறைவனது பண்புகளை சரியாக அடையாளம் கண்டு கொள்ள வில்லை. மேலும் சந்தேகத்தில் மூழ்கி விட்டனர். அவர்கள் கண்டு அறிந்தாலும் மறந்து விட்டார்கள்.

முஸ்லிம்கள், அவர்களுடைய இறைவனுக்குதான் அனைத்துப் புகழும் உரியது என்ற போதனை செய்யப்பட்டுள்ளது. இதனை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

அல்ஹம்து லில்லாஹி என்ற வார்த்தையில் முஸ்லிம்களுக்கு போதனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது அவர்களிடம் உங்களது இறைவன் யார் என்று கேட்கப்பட்டால் அப்போது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீதும் கடமை என்னவென்றால் அவர்கள், எங்களது இறைவன் எல்லாப் புகழுக்கும் உரியவன் ஆவான் என பதில் அளிக்க வேண்டும். மேலும் அவனிடம் இல்லாத எந்தவொரு மேன்மையும், வல்லமையும் இல்லை. ஆகையால் நீங்கள் மறக்கக்கூடியவர்களாகி விடாதீர்கள்.

எனவே அல்ஹம்துலில்லாஹ் என்று வெறும் வாயளவில் கூறினால் மட்டும் போதாது. எப்பொழுதெல்லாம் அல்ஹம்து என கூறப்படுமோ அபபோது எனக்கு ஒரு இறைவன் இருகின்றான். அவனை நான் வணங்குகின்றேன் என்ற கவனம் ஏற்பட வேண்டும். மேலும் அவன் நான் எதற்காக வணங்குகின்றேன் என்றால் அவன் எனது ரப் ஆவான். அவன் எனது அல்லாஹ் ஆவான் என்பதனால் ஆகும்.

**மேலும் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இந்த அதிகாரம் அல்ஹம்துலில்லாஹ் என தொடங்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் என்னவென்றால், எல்லாப் புகழும் மேன்மையும் அல்லாஹ் எனப் பெயரைக் கொண்டவனுக்கே உரியதாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். மேலும் இந்த சொற்றொடர் அல்ஹம்துலில்லாஹி என்று ஏன் தொடங்கப்பட்டுள்ளது என்றால், இதன் உண்மையான விளக்கம் என்னவென்றால், இறைவணக்கம் என்பது ஆன்மாவின் எழுச்சி மற்றும் உணர்வின் ஈர்ப்பு ஆகியவற்றால் இருக்க வேண்டும். அந்த ஈர்ப்பு இறை அன்பு மற்றும் நேசத்தால் நிறைந்திருக்க வேண்டும். அது ஒருபோதும் வேறு யாருக்காகவும் உருவாக முடியாத அளவில் இருக்க வேண்டும். ஒருவரிடம் முழுமையான சிறப்புகள் யாவும் ஒட்டுமொத்தமாக காணப்படும் எனில் அதைப் பார்த்து உள்ளம் தன்னையும் அறியாது புகழும்.

முழுமையான புகழ்ச்சி இரண்டு வகையான சிறப்புகளால் ஏற்படுகிறது என்பது வெளிப்படையான ஒன்றாகும். முதலாவது சிறப்பு முழுமையான அழகு, இரண்டாவது சிறப்பு முழுமையான கருணை ஆகும். அதாவது யாரிடமாவது அழகு இருக்கும் என்றால் அப்போது புகழப்படுகின்றது. அல்லது யார் மீதாவது கருணை காட்டினால் அப்பொழுதும் புகழப்படுகின்றது. யாரிடமாவது இந்த இரண்டு சிறப்புகளும் ஒன்றுசேர்ந்திருக்கும் என்றால் அவருக்காக உள்ளம் அற்பணம் ஆகி விடுகிறது. திருக்குர்ஆனின் பொருள் என்னவென்றால், இறைவன் இரண்டு வகையான சிறப்புகளையும், உண்மையைத் தேடுபவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் உதாரணம் இல்லாதவனும் ஈடு இணையற்றவனுமாகிய இறைவன் பக்கம் மக்கள் ஈர்க்கப்பட வேண்டும். உள்ளத்தின் எழுச்சி, ஈர்ப்பு ஆகியவற்றின் மூலம் அவர்கள் அவனது அடியார்களாகத் திகழ வேண்டும். இதனால்தான் முதல் அதிகாரத்திலேயே மிகவும் நுண்ணிய கருத்தை வெளிப்படுத்த விரும்பி இருக்கின்றான். எந்த இறைவனின் பால் திருக்குர்ஆன் அழைக்கிறதோ அந்த இறைவன் எப்படிப்பட்ட

சிறப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளான். எனவே இந்த நோக்கத்தின் காரணமாகத்தான் இந்த அதிகாரம் அல்ஹம்துலில்லாஹ் என்று தொடங்கப்பட்டுள்ளது. அல்லாஹ் என்ற பெயரை கொண்டவனுக்கு மட்டுமே அனைத்து புகழும் உரியது என்பதே இதன் பொருளாகும்.

எனவே இறைவன் அழகு மற்றும் கருணை ஆகியவற்றை ஒருங்கே கொண்டவன் ஆவான். எனவே அல்ஹம்துலில்லாஹ் என்று தொடங்கப்பட்டுள்ளது.

மேலும் ஓரிடத்தில் அல்லாஹ்வுடைய அழகு என்ன என்பதையும், அல்லாஹ்வுடைய கருணை என்பது என்ன என்பதனையும் விளக்கியுள்ளார்கள். இங்கு ஒரு தனி கருத்துக் கூறப்பட்டுள்ளது. அதை எடுத்துரைக்கிறேன்.

அல்லாஹ்வின் அழகு என்பது எல்லா விதமான சிறப்பு அம்சங்களும் அவனிடம் தென்படுகிறது. இதற்கு முன்பும் இது கூறப்பட்டுள்ளது. அவன் அனைத்து முழுமையான பண்புகளையும் தன்னகத்தே கொண்டவன் ஆவான். அவனிடம் அனைத்து பண்புகளும் இருக்கின்றன அவனது கருணை பற்றி நான்கு அடிப்படையான பெரிய கோட்பாடுகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த அதிகாரத்தின் கருத்திற்கேற்ப கூறியுள்ளார்கள். அதனை சுருக்கமாகக் கூறுகிறேன்.

அவனது முதல் கருணை அவன் ரப் ஆவான் என்பதாகும். அவன் படைத்த பிறகு முழுமை வரை சென்றடையச் செய்கின்றான்; பரிபாலிக்கின்றான். இரண்டாவது கருணை, அவனது ரஹ்மானிய்யத் என்னும் பண்பு ஆகும். இதன் அடிப்படையில் அவன் ஒவ்வொரு உயிருள்ளவற்றிற்கும் ஆற்றல் வழங்கியுள்ளான். அவைகளது தேவைகளுக்கேற்ப அவைகளின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை ஏற்பாடு செய்துள்ளான். மேலும் இதில் மனிதனுக்கு அதிக அளவு பங்கு கொடுத்துள்ளான். மூன்றாவது கருணை, அவனது ரஹீமிய்யத் என்னும் பண்பாகும். துஆக்கள், நன்னடத்தைகள் போன்றவற்றை ஏற்றுக் கொள்கிறான். துன்பங்கள் மற்றும் கஷ்டங்களிலிருந்து பாதுகாக்கிறான். அதற்கு கூலியும் கொடுக்கிறான். அவனது நான்காவது கருணை, மாலிக்கி யவ்மித்தீன் ஆகும். இதன் அடிப்படையில் அவன் தனது விருப்பப்படி தனது சிறப்பான அருளினால் கருணை புரிகின்றான். எந்த அளவு கொடுக்க நாடுகின்றானோ கொடுக்கின்றான். செயல்களுக்கு கூலி கொடுக்கின்றான். இதனை அவனது சிறப்பான அருளினால் கொடுக்கின்றான்.

இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய நான்கு கருணைகள் ஆகும். இதனை நான் மிகச் சுருக்கமாகக் கூறினேன்.

பிறகு ரப்புல் ஆலமீன் என்பதில் அல்லாஹ் ஒவ்வொரு வழிகேட்டிற்குப் பிறகும் ஹிதாயத்திற்கான காலத்தைக் கொண்டு வருவான் என்பதனைப் பற்றி விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் சுப்ஹானவுத்தஆலா ரப்புல் ஆலமீன் என்ற சொல்லில் அவன் அனைத்திற்கும் படைப்பாளன் ஆவான். வானங்களிலும், பூமியிலுள்ளவை அனைத்தும் அவன் புறமிருந்தே வந்துள்ளன. பூமியில் காணப்படும் ஹிதாயத் பெற்ற ஜமாஅத்துகள் அல்லது வழிகெட்ட தீய கூட்டங்கள் ஆகியவை அனைத்தும் ஆலமீனில் அடங்கும். சில சமயங்களில் வழிகேடு, நிராகரிப்பு, தீமை, அநியாயம் போன்றவற்றை தடுப்பதற்குரிய நிலைமை ஏற்படுகின்றது. எந்த அளவு என்றால் பூமி அநீதியினால் நிறைந்து காணப்படுகிறது. மக்கள் இறைவனுடைய வழியினை விட்டு விடுகிறார்கள். அவர்கள் அடியானுக்குரிய உரிமையை அறிந்திருக்க மாட்டார்கள். படைப்பாளனின் உரிமையையும் நிறைவேற்றுவதில்லை. அடியானுக்குரிய உரிமை அவர்களுக்கு முன்பாக இருப்பதில்லை.

கூறுகின்றார்கள்: காலம் ஒரு இருண்ட இரவைப் போன்றதாகி விடுகிறது. மார்க்கம் இதுபோன்ற கஷ்டங்களுக்கு கீழே நசுக்கப்படுகிறது. பிறகு அல்லாஹ் வேறொரு உலகத்தை கொண்டு வருகிறான். அப்போது இந்த பூமி பழைய பூமியிலிருந்து மாறி ஒரு புதிய பூமியாகி விடுகிறது. ஒரு புதிய இறை நியதி

வானத்திலிருந்து இறங்குகிறது. மக்களுக்கு உண்மையைப் புரியக்கூடிய உள்ளம், இறைவனது அருள்களுக்கு நன்றி செலுத்துதவற்காக பேசக்கூடிய நாவு கொடுக்கப்படுகிறது. அப்போது அவர்கள் தனது ஆன்மாக்களை இறைவழியில் செல்லக்கூடிய பாதையாக ஆக்கிக் கொள்வார்கள். மேலும் அச்சம் மற்றும் நம்பிக்கையுடன் அவன் பக்கம் வருகிறார்கள். வெட்கத்தினால் குனிந்திருக்கக்கூடிய பார்வைகளுடனும், மேலும் கிப்லாவின் பக்கம் முகம் திருப்பியவாறு பற்றுறுதியில் உச்சியினை எட்டக்கூடிய உறுதிப்பாடுடனும் வருகிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இங்கு இறைவன் மற்றொரு உலகைக் கொண்டு வருவான் என்றும், பூமி மற்றொரு பூமியாக மாறிவிடும் என்றும் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கஷ்ஃப் காட்சியில் கண்டார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நாம் கஷ்ஃபில் புதிய பூமியையும், புதிய வானத்தையும் உருவாக்கியுள்ளோம். பிறகு வாருங்கள் இப்போது மனிதர்களைப் படைப்போம் என்றேன்.

அந்தக் காலத்தில் இதனைக் கேட்ட மவ்லவிகள் இவர் இறைவன் என்று தன்னை வாதிக்கிறார் என கூச்சலிட்டனர். அன்னார் கூறுகின்றார்கள்:

இது இறைவனுக்கான வாதம் கிடையாது. மாறாக இதன் பொருள் இறைவன் எனது கையின் மூலமாக ஒரு புரட்சியை ஏற்படுத்துவான். இதன் மூலமாக வானமும், பூமியும் புதிதாக ஆகி விடும். உண்மையான மனிதர்கள் பிறப்பார்கள். அவர்கள் இறைவனை தூய்மையான முறையில் வணங்குபவர்களாவார்கள். அடியானுக்குரிய உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாவர். படைத்தவனின் உரிமையை கண்டு கொள்ளக் கூடியவர்களாவர்.

**அன்னார் கூறுகின்றார்கள்:**

வெட்கத்தினால் குனிந்திருக்கக்கூடிய பார்வைகளுடனும், மேலும் கிப்லாவின் பக்கம் முகம் திருப்பியவாறு அடிமைத்தனத்தின் உச்சியினை தட்டக்கூடிய உறுதிப்பாட்டுடனும் வருவார்கள். மனிதனுடைய வழிபடுதலுக்கான உரிமையை நிறைவேற்றுவார்கள். அதன் உச்சத்தில் உரிமையை நிறைவேற்றுவார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் அவர்களின் தேவை ஏற்படுகிறது. விஷயம் வழிதவறி விடுகிறது. அப்போது நிலைமை மாறுவதால் மக்கள் மிருகங்களைப் போன்று ஆகி விடுகின்றனர்.

அப்போது இறைவனது அருள் மற்றும் இறைவனின் உதவி இருளை ஒழிக்கக்கூடிய ஒரு மனிதரை வானம் உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. மேலும் இப்லீஸ் ஏற்படுத்திய கூடாரங்களையும், கட்டிடங்களையும் அழித்து விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. அப்போது ரஹ்மான் ஆகிய இறைவன் புறமிருந்து ஒரு இமாம் தோன்றுகிறார். அவர் ஷய்த்தானிய படைகளுடன் போரிடுவார். நான் இதற்கு முன்பு கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கஷ்ஃபில் இவ்வாறு கண்டார்கள்.

கூறுகின்றார்கள்: ரஹ்மானியப் படைகள், ஷய்த்தானியப் படைகள் ஆகிய இந்தப் படைகளும் ஆயுதங்களுடன் களமிரங்குகிறார்கள். ஒரு ரஹ்மானியப் படையும் ஒரு ஷய்த்தானியப் படையும் இருக்கும். இவை இரண்டிற்கும் இடையில் போர் நடைபெறும். எவருக்கு இரண்டு கண்கள் கொடுக்கப்பட்டுள்ளதோ அவரே இதனை காண்பார். பார்வைக்கான கண்கள் உள்ளவர் தனது கண்களைப் பார்க்க முடியும். இறைவனது ருபூபிய்யத் உடைய உரிமையை நிறைவேற்றுபவராலும் அடியானுக்குரிய உரிமையை நிறைவேற்றுபவராலும் பார்க்க முடியும். எதுவரையென்றால் பொய்யில் கழுத்தில் தூக்கு அணிவிக்கப்படும். பொய்யின் கானல் நீர் போன்ற ஆதாரங்கள் அழிந்து விடும். அப்போது இந்த இமாம் எதிரிகளின் மீது எப்போதும் வெற்றி பெற்றவராகவும், ஹிதாயத் பெற்ற மக்களுக்கு உதவியாளராகவும் விளங்குவார். ஹிதாயத்தின் கொடியை உயர்த்துவார். தூய்மையாளர்களின் நேரங்களையும் கூட்டங்களையும் உயிர்பிக்கக் கூடியவராக விளங்குவார். பரிசுத்தத் தன்மை, தக்வா போன்ற விஷயங்களிலிருந்து அவரது அதிக நேரங்கள் செலவாகும்.

அல்லாஹ்வைப் பற்றிய பேச்சுகள் நடைபெறும். இபாதத்துகள் பற்றி பேச வரும். அல்லாஹ்வின் பணிகளைப் பற்றி பேசப்படும். எந்த அளவுக்கென்றால் மக்கள் அவரைப் பார்த்து நிராகரிப்பின் தலைவர்களை கைது செய்து விட்டார் எனப் புரிந்து கொள்வார்கள். அவர்களைக் கட்டிப் போட்டு விட்டார் என்று புரிந்து கொள்வார்கள். அவர் பொய், ஏமாற்றுதல் போன்ற விலங்குகளை கைது செய்து விட்டார் என்றும் அதன் கழுத்துகளில் தூக்கு அணிவித்து விட்டார். அவர் பித்அத்துகளின் கட்டிடங்களை தகர்த்து விட்டார். அதன் கலசத்தை உடைத்து விட்டார். அவர் ஈமானுடைய வார்த்தைகளை ஒன்றுசேர்த்து விட்டார். அதன் காரணிகளை ஒழுங்குபடுத்தி விட்டார். அவர் வானத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தி விட்டார். அனைத்து விதமான ஓட்டைகளையும் அடைத்து விட்டார் என்று மக்கள் புரிந்து கொள்வார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் புதிய பூமியும், புதிய வானமும் உருவாகியுள்ளது. இதிலிருந்து நாம் பலன் பெற்றுக் கொண்டிருக்கிறோம். நாம் அனைத்து விதமான பித்அத்துகளிலிருந்து முழுமையாக தவிர்ந்து இருப்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் ஈமானை வலுவடையச் செய்ய வேண்டும். அல்லாஹ்வுடைய அடியானாக விளங்குவதற்குரிய உரிமையை நிறைவேற்ற வேண்டும். அவனது ருபூபிய்யத் – படைத்துப் பரிபாலிக்கும் தன்மையை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் இந்த புதிய பூமி, புதிய வானத்திலிருந்து முழுமையான முறையில் பலன் பெற முடியும்.

அடியான் தனது இறைவனை உண்மையான முறையில் அறிந்து கொண்ட பிறகு இபாதத்துகளில் உயர் தரத்தை ஏற்படுத்த முயற்சி செய்வான். அப்போது அவன் ரப்புல் ஆலமீன் பற்றிய அறிவைப் பெறுவான். இது அவரை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்டுகிறது.

இதனைப் பற்றி, பரிசுத்தமான அல்லாஹ், ரப்புல் ஆலமீன் எற்ற வார்த்தையில் இதனைச் சுட்டிக்காட்டிக் கூறுகின்றான். அவன் அனைத்திற்கும் படைப்பாளன் ஆவான். வானங்களிலிலும் பூமியிலும் அவனது புகழே பாடப்படுகின்றன. பிறகு அவனது புகழைப் பாடக்கூடியவர்கள் எப்போதும் அவனது புகழிலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இறை நினைப்பில் மூழ்கி இருப்பார்கள். எந்தவொரு பொருளும் அவனது புகழ் பாடாமல் இல்லை. எல்லா பொருட்களும் எந்நேரமும் புகழ்பாடிக் கொண்டே இருக்கின்றன. அவனது ஒரு அடியான் தனது விருப்பம் என்னும் ஆடையை கழற்றி எறியும்போது தனது உணர்வுகளிலிருந்து விடுபடும்போது, அல்லாஹ்வின் பாதையிலும், அவனது இபாதத்துகளிலும் தன்னையே மாய்த்துக் கொள்ளும்போது தனது கருணையில் பரிபாலித்த தனது இறைவனை கண்டறிந்து கொள்ளும் போது அவர் தனது எல்லா நேரங்களிலும் புகழ்பாடுவார். தனது முழு உள்ளத்துடனும் உடலின் அனைத்து உறுப்புகள் மூலமாகவும் அவனை நேசிக்கும்போது அந்த மனிதர் ஆலமீன்களில் ஒரு ஆலமாக மாறி விடுவார். அன்னார் இதற்கு உதாரணங்களையும் கூறியுள்ளார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆலமீன்களில் ஓர் ஆலம் ஹஸ்ரத் காத்தமுன் னபிய்யீன் (ஸல்) அவர்கள் தோன்றிய காலமாகும். பிறகு அன்னார் தனது காலத்தின் உதாரணத்யையும் கூறுகின்றார்கள். அதாவது அல்லாஹ் தன்னை தேடுபவர்கள் மீது கருணை காட்டியவாறு மேலும் ஒரு கூட்டத்தை ஏற்படுத்தினான். அது மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மவ்வூதுடைய கூட்டம் ஆகும். எனவே நாம் இந்த ரப்புல் ஆலமீனால் அனுப்பப்பட்டவருடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் நாம் இந்த ஆலமீனில் பங்கு கொள்ள வேண்டுமென்றால் பிறகு எல்லா விஷயங்களிலும் தூய்மையான முறையில் அல்லாஹ்வுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் ரப்புல் ஆலமீனுடைய அருட்களிலிருந்து பலன்பெற முடியும்.

ஆலமீன்களில் எவையெல்லாம் அடங்கும்? ஆலமீன் என்றால் என்ன? என்பதைப் பற்றி விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

ஆலமீன் என்றால் படைப்பினங்களைப் படைத்த இறைவனைத் தவிர மற்ற அனைத்தும் அவை ஆன்மாக்களின் ஆலமாக இருந்தாலும் சரி அல்லது உடல்களின் ஆலமாக இருந்தாலும் சரி, ஆன்மாக்கள்,

உடல்கள் போன்ற எவையாக இருந்தாலும் சரி, அல்லாஹ்வைத் தவிர மற்ற அனைத்தும் ஆலமீன்களைச் சேர்ந்தவை ஆகும். அவை பூமியில் வாழும் படைப்பினங்களாக இருந்தாலும் சரி, சூரியன், சந்திரன் போன்றவைகளும், இவை வேறு எல்லா கோள்களைப் போன்ற பொருள்களாக இருந்தாலும் அவை அனைத்தும் இறைவனுடைய ருபூபிய்யத்தின் கீழ் உள்ளதாகும். இவை அனைத்தும் இறைவனுடைய ருபூபிய்யத்தின் கீழ் உள்ளதாகும். மேலும் இறைவன் தான் அனைத்து உலகங்களையும் படைத்துப் பரிபாலிக்கின்றான் என்பதனை நாம் அறிவோம். இருந்தபோதிலும் சில சமயங்களில் அடியான் மற்றொரு அடியானை ரப் ஆக கருத ஆரம்பித்து விடுகின்றான். சில சமயங்களில் சுற்றுச்சூழலின் தாக்கத்தின் கீழ் வந்து பௌதீகம் மேலோங்கி விடுகிறது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு மூஃமின் உடனே தன்னை ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட வேண்டும். மேலும் இதற்காக முயற்சி செய்ய வேண்டும். ஆராய்ந்து பார்க்கும் போது தவ்பா, இஸ்திக்ஃபார் மூலம் உதவி கோரியவாறு ரப்புல் ஆலமீனின் பக்கம் திரும்ப வேண்டும். இதனில் எந்தப் புதிய பூமியில் நாம் வாழ்கின்றோமோ மேலும் எந்த புதிய வானத்தின் கூரை நமக்கு மேல் உள்ளதோ அதிலிருந்து நாம் பயன்பெற முடியும்.

பௌதீக தேவைகளுடன் ஆன்மீக தேவைகளையும் அல்லாஹ் நிறைவேற்றுகிறான் என்பதனை ரப்புல் ஆலமீனின் விளக்கத்தில் அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவன் அனைத்து உலகத்திற்கும் இறைவன் ஆவான். அவன் எவ்வாறு பௌதீக தேவைகள் மற்றும் தர்பிய்யத்திற்கான சாமான்களையும் பொருள்களையும் எந்தவித பாகுபாடுமின்றி அனைத்துவித படப்பினங்களுக்காக ஒட்டுமொத்தமாக படைத்துள்ளானோ மேலும் நமது போதனையின்படி அவன் ரப்புல் ஆலமீன் ஆவான். அவன் தானியங்கள், காற்று, நீர், ஒளி போன்ற பொருள்களை அனைத்து படைப்பினங்களுக்காகவும் பொதுவாக படைத்துள்ளானோ, இதனைப் போன்றே அவன் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சீர்திருத்தத்திற்காக அவ்வப்போது சீர்திருத்தவாதிகளை அனுப்பிக் கொண்டே இருக்கின்றான். இதனைப் பற்றி திருக்குர்ஆனில் வருகிறது.

***எச்சரிக்கை செய்பவர் எவரும் வராத எந்தச் சமுதாயமும் இல்லை. (35:25)***

எனவே அனுப்பிக் கொண்டே இருக்கின்றான் என்றால் இக்காலத்திலும் அனுப்பியுள்ளான். அல்லாஹ்வுடைய அருள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்துடன் மட்டும் சிறப்பிற்குரியது கிடையாது என்பதனை ரப்புல் ஆலமீனுடைய விளக்கவுரையில் அன்னார் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் திருக்குர்ஆனின் இந்த வசனத்தைக் கொண்டுதான் தொடங்கி இருக்கின்றான். அது சூரா ஃபாத்திஹாவில் அல்ஹம்துலில்லாஹி ரப்புல் ஆலமீன் என்பதாகும். அனைத்து விதமான தூய்மையான பண்புகள் இறைவனுடன் தொடர்புடையதாகும். அவன் அனைத்து உலகத்திற்கும் ரப் ஆவான். ஆலம் என்ற சொல்லில் பல்வேறு சமுதாயங்களும் பல்வேறு காலகட்டங்களும் பல்வேறு நாடுகளும் அடங்கி இருக்கின்றன. இந்த வசனத்துடன் தான் திருக்குர்ஆன் தொடங்கப்பட்டுள்ளது.

இது உண்மையில் அந்த சமுதாயங்களுக்கு அதாவது இறைவனுடைய பொதுவான ருபூபிய்யத் மற்றும் அருளை தனது சமுதாயம் வரை மட்டுமே ஆகும் எனக் கருதக்கூடிய மக்களுக்கு, அவர்கள் மற்ற சமுதாயங்களை அவர்கள் இறைவனுடைய அடியார்களக கருதுவதேயில்லை. இறைவன் மற்ற சமுதாய மக்களின் படைத்து குப்பையைப்போன்று தூக்கி எறிந்து விட்டான். அல்லது அவர்களை மறந்து விட்டான் அல்லது அவர் அவர்களை படைக்கவில்லை என கருதக்கூடிய மக்களுக்கு இந்த வசனம் ஒரு மறுப்பு ஆகும். எவ்வாறு ரப்புல் ஆலமீன் பௌதீக முன்னேற்றத்திற்கு தேவையானவற்றை படைத்தானே அதேபோன்று ஆன்மீக முன்னேற்றத்திற்கு தேவையானவற்றையும் படைத்துள்ளான். இது அவனது ருபூபிய்யத் ஆகும். எவர் ஒருவர் இதனை மறுப்பாரோ அவர் அல்லாஹ்வுடைய ருபூபிய்யத் என்ற பண்பை மறுப்பவர் ஆவார்.

எனவே சூரா ஃபாத்திஹாவைப் படித்தும் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுக்கக்கூடிய மக்களும் சிந்திக்க வேண்டும். மேலும் நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் பைஅத் செய்த பிறகு நமது ஆன்மீகத்திலும், தக்வாவிலும் முன்னேறக்கூடிய மக்களாக நாம் ஆக வேண்டும். அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: எனது அடியார்களே! எனது பண்புகளின் மூலம் என்னை கண்டறியுங்கள். மேலும் எனது சிறப்புகளின் மூலம் என்னை கண்டறியுங்கள். நான் குறைகள் உடையவர்களை போன்றவன் இல்லை. எனது ஹம்து உடைய தரம் மிகைப்படுத்தி அதிகப்படியாக புகழக்கூடியவரை விட அதிகமானதாகும். நீங்கள் என்னிடம் காணப்படாத புகழுக்குத் தகுதியான பண்புகளை வானங்களிலும் பூமியிலும் எங்கு தேடினாலும் கிடைக்காது. நீங்கள் எனது புகழுக்குத் தகுதியான பண்புகளை எண்ண நினைத்தால் உங்களால் ஒருபோதும் அதனை எண்ண முடியாது.

நீங்கள் இதற்காக எவ்வளவு தான் உயிரைக் கொடுத்து சிந்தனை செய்தாலும் சரியே! தனது பணியில் மூழ்கிக் கிடப்பவர்களைப் போன்று இந்தப் பண்புகளைத் தேடுவதில் எவ்வளவு கஷ்டத்தை மேற்கொண்டாலும் சரி! ஆழமாக சிந்தனை செய்யுங்கள். என்னிடம் இல்லாத ஏதாவதுதொரு புகழுக்குரிய பண்பு தென்படுகிறதா? என்னை விட்டும் என்னுடைய தர்பாவை விட்டும் ஏதாவது ஒரு சிறப்பு தென்படுகிறதா? அவ்வாறு நீங்கள் நினைத்தால் நீங்கள் என்னை கண்டறியவில்லை என்பதாகும். நீங்கள் குருடர்களை சேர்ந்தவர்களாவீர்கள். மாறாக நான் நிச்சயமாக எனது பண்புகள் மற்றும் சிறப்புகள் மூலமாக அறியப்படுவேன். அதாவது அவனது புகழுக்குரிய பண்புகள் மற்றும் சிறப்புகள் மூலம் அவன் கண்டறியப்படுகின்றான். மேலும் எனது அடை மழை எனது அருட்கள் என்ற மேகத்தால் அறியப்படுகிறது.

எனவே எந்த மக்கள எனனை அனைத்து முழுமையான பண்புகள் மற்றும் அனைத்து சிறப்புகளின் தொகுப்பு என நம்பினார்களோ அவர்கள் எங்கெல்லாம் எனது சிறப்புகளை கண்டார்களே தமது சிந்தனையின் எல்லையில் அவர்கள் கண்ட தனது வல்லமையின தோற்றம் ஆகிய அனைத்தையும் அவர்கள் எனக்கே உரியது என்று சுட்டிக் காட்டினார்கள. அவர்களது அறிவிலும், பார்வையிலும் தென்பட்ட கண்ணியத்தை அவர்களது சிந்தனைகள் கண்ணாடியில் தென்பட்ட ஒவ்வொரு வல்லமையையும் அவர்கள என்னுடையது என்றே சுட்டிக் காட்டினார்கள். எனவே இவர்கள்தான் எனது ஞானத்தின் வழியில் நிலைபெற்று இருப்பவர்கள் ஆவர். உண்மை, அவர்களுடன் இருக்கின்றது. இவர்கள் தான் வெற்றி பெறக் கூடியவர்கள் ஆவர். இறைவன் உங்களைப் பாதுகாப்பாக வைப்பானாக. எழுங்கள்! அல்லாஹ்வின் பண்புகளைத் தேடுவதில் ஈடுபடுங்கள். அறிவாற்றல் படைத்தவர்கள், சிந்தனைத் திறன் பெற்றவர்களைப் போன்று இதில் ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள். மிகவும் சிறந்த முறையில் அலசி ஆராயுங்கள். சிறப்புகளின் ஒவ்வொரு பிரிவிலும் ஆழ்ந்து கவனியுங்கள். இந்த உலகத்தின் உட்புறத்திலும் வெளியிலும் ஒரு பேராசை கொண்டவர் தனது ஆசைகளைப் பெறுவதற்காக தேடுவதைப்போன்று தேடுங்கள்.

எனவே நீங்கள் இதனுடைய முழுமையான சிறப்புகளை அடையும் போது அதனுடைய நறுமணத்தை அடையும் போது நீங்கள் அவனை அடைந்தவர்களாய் ஆகி விடுவீர்கள். இது எப்படிப்பட்ட இரகசியம் என்றால் ஹிதாயத்தை தேடக்கூடியவர்களிடம் மட்டும்தான் இது வெளிப்படும். எனவே உங்களுடைய ரப் உங்களுடைய தலைவன் ஆவான். அவன் முழுமையானவன் ஆவான். எல்லா விதமான பண்புகளும் முழுமையும் எல்லா விதமான புகழின் தொகுப்பும் ஆவான். இதனை சூரா ஃபாத்திஹாவில் கவனம் செலுத்தக் கூடியவர் மட்டும் தான் கண்டறிவார். மேலும் வேதனை நிறைந்த உள்ளத்துடன் இறைவனிடம் உதவி கோறபவர்தான் இதைப் பெறுவார்கள். இறைவனுடன் உடன்படிக்கை செய்யும் போது தனது எண்ணங்களை கலப்பற்றதாக ஆக்கிக் கொண்டு உடன்படிக்கை செய்யக் கூடியவர்கள், தனது நஃப்ஸை எல்லா விதமான போட்டி, பொறாமையிலிருந்து தூய்மைப்படுத்தக்கூடிய மக்களுக்கு இந்த சூராவின் வாசல்கள் திறக்கப்படும். அவர்கள் உடனே பார்வை பெற்றவர்களாக ஆகி விடுகின்றனர். எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத்

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்த பிறகு இந்த தரத்தைப் பெறுவதற்கு நாம் எப்போதும் தேடிக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் அந்த தரத்தினை சென்றடைய வேண்டும். சூரா ஃபாத்திஹாவுடைய சிந்தனையும் மேலும் முழுக் குர்ஆனை சிந்தனை செய்து ஆராயக்கூடிய வழிகளும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வழிகாட்டல்கள் மற்றும் போதனைகள் மூலமாகத்தான் நமக்கு கிடைக்கப் பெறும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப இறைவனுடைய பணிகளைப் பற்றிய அறிவைப் பெற்று நமது வாழ்வை அவனது போதனைகளின்படி நடத்துவதற்கு முயற்சி செய்யக்கூடிய மக்களாக நம்மை ஆக்குவானாக!

இன்று நான் தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். முதல் ஜனாஸா மதிப்பிற்குரிய மர்ஹூம் மவ்லானா அஹ்மது கான் நஸீம் சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய ஃபத்ஹ் பேகம் சாஹிபா அவர்களின் ஜனாஸா ஆகும். மவ்லானா சாஹிப் ரப்வாவின் Local Additional Nazir Islaho Irshad ஆக இருந்தார்கள். இவர் இறந்து பல நாட்கள் ஆகிறது. இவரது மனைவி பிப்ரவரி 4 ஆம் தேதி மரணம் அடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் மிகவும் நல்ல துஆ செய்யக்கூடிய தொழுகையை கடைபிடிக்கக்கூடிய தஹஜ்ஜுத் தொழக்கூடிய தக்வாவை மேற்கொண்ட விசுவாசமுள்ள பெண்மணி ஆவார்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று இவரது கணவர் மவ்லானா அஹ்மது கான் நஸீம் சாஹிப் Local Additional Nazir Islaho Irshad ஆக இருந்தார்கள். இதில் பொதுவாக கிராமத்து ஜமாஅத்துகள் அல்லது மாவட்டங்கள் அடங்கும். இதில் அதிகமாக கிராமத்து ஜமாஅத்துகளே இதன்கீழ் செயல்பட்டு வந்தன.

சர்கோதா மாவட்டம் ரப்வாவுக்கு மிகவும் அருகில் இருந்தால், பெரும்பாலான அஹ்மதிகள் அங்கிருந்து ரப்வா வந்து விடுவார்கள். மவ்லவி அஹ்மது கான் நஸீம் சாஹிப் உடைய வீடு அவர்களுக்கு தனது வீடு போன்றதாகவே இருந்தது. சில சமயங்களில் 50க்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்ட குழுக்கள் பல்வேறு இடங்களிலிருந்து பயணம் செய்து அங்கு வந்து விடும் என அவரது மகன் எழுதி இருக்கின்றார். மிகவும் பரிவுடன் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வார்கள். நமது பகுதிகளில் கிராமத்து மக்கள் தகவலின்றி திடீரென்று வந்து விடுவார்கள் என்பது உங்களுக்கு தெரியும். உடனே அவர்களுக்கு சூடான உணவுகள் தயார் செய்யப்படும். ஒருபோதும் இவ்வளவு பேர் எங்கிருந்துதான் வருகிறார்கள் என முகம் சுழித்தது கூட கிடையாது.

மவ்லவி சாஹிபின் மரணத்திற்கு பிறகும் இவர்களுடன் நல்ல தொடர்பு ஏற்பட்டிருந்தது. அந்த தொடர்பை அவர்கள் தொடர்ந்தார்கள். மக்கள் அவர்களது வீட்டிற்கு வந்து போயிருப்பார்கள. ஏழைகளுக்கு உதவி செய்தும் வந்துள்ளார்கள். தமது பிள்ளைகளிடமிருந்தும் ஒருபோதும் எதுவும் பெற்றதில்லை. மாறாக அவர்களிடம் ஏழைகளுக்கு உதவி செய்யுமாறு அறிவுறுத்திக் கொண்டே இருப்பார்கள். அவர்களிடம் உள்ள தொகையை ஏழைகளுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் அனாதைகளுக்கும் பிரித்துக் கொடுத்து விடுவார்கள். இவர்களது வீட்டில் ஏழைகளின் ஒரு வரிசை இருந்து கொண்டேயிருக்கும் எனக் கூறுகின்றனர். சுக துக்கங்களைப் பற்றி பேசுவதற்கு பெண்கள் இவர்களிடம் வருவதும் உண்டு. மேலும் மாபெரும் சிறப்பம்சம் என்னவென்றால், கிலாஃபத்துடன் மிகவும் பற்றுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள். தனது பிள்ளைகளுக்கும் எப்பொழுதும் இதனைப் பற்றி அறிவுறுத்திக் கொண்டேயிருப்பார்கள். அவர்களுடைய உள்ளத்திலும் கிலாஃபத்தின் மீது அன்பு ஏற்படுத்தியிருந்தார்களா. அதற்கான முயற்சியையும் மேற்கெண்டு வந்தார்கள். இவர் மூஸி ஆவார். அல்லாஹ் இவருடைய தர்ஜாவை உயர்த்துவானாக. இவர் தனக்கு பின்னால் 3 மகள்களையும் 3 மகன்களையும் நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

இதில் ஒரு மகன் இவருடனே இருந்து வந்தார். மற்ற இரண்டு மகன்களும் வெளிநாட்டில் வசித்து வருகிறார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய நாஸிர் பர்வானி சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய நஸீம் மஹ்தி சாஹிப் ஆவார். இவர் அமெரிக்காவில் நமது ஜமாஅத் முபல்லிக் ஆக பணியாற்றுகின்றார். பர்வாஸ் சாஹிப் மற்றும் நஸீம் மஹ்தி சாஹிப் ஒரு சில காரணங்களால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ்

இவர்கள் அனைவருக்கும் பொறுமையயும் தைரியத்தையும் வழங்குவானாக. மேலும் நஸீம் மஹ்தி சாஹிப் நமது ஜமாஅத் முபல்லிக் ஆக இருக்கிறார். இவரது பணியில் நிச்சயமாக இவரது தாயாரது துஆ உதவி செய்து வந்தது. அல்லாஹ் வருங்காலத்திலும் இந்த துஆக்களுக்கு இவர்கள் வாரிசாகும்படி செய்வானாக.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் முஅல்லிம் உடைய மனைவி மதிப்பிற்குரிய பீபி சாஹிபா உடையதாகும். இவர் பிப்ரவரி 9ம்தேதி ஏறக்குறைய தனது 100வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். மிகவும் நல்ல பெண்மணி ஆவார். துஆக்கள் செய்யக்கூடிய தவக்குல் கொண்ட பெண்மணி ஆவார். மிகவும் கஷ்டமான பொருளாதார நிலையிலும் தனது கணவருடன் விசுவாசத்துடன் இருந்து வந்துள்ளார்கள். தன்மான உணர்வு கொண்ட பெண்மணி ஆவார்கள். மிகவும் கஷ்டமான பொருளாதார சூழலிலும் எவரிடமும் கையேந்தவில்லை. மிகவும் நல்ல ஆடைகளையே அணிந்து வந்தார்கள். குறைந்த செலவில் நன்றாக வாழ்வதற்கு முயற்சி செய்து வந்தார்கள். 28 வயது வரை ரஸூல் நரகில் வாழ்ந்து வந்தார்கள். ஜமாஅத் சென்டர் அங்கு இருந்தது. ஜமாஅத் விருந்தினர்களும் ஏனைய விருந்தினர்களும் அங்கு செல்வார்கள். இவர்களது வீடு விருந்தினர் இல்லமாக பயன்பட்டு வந்தது. மிகவும் மன மகிழ்ச்சியுடன் விருந்து உபசரித்து வந்தார்கள். 1974ல் நடந்த பிரச்சனையில் பெண்கள், குழந்தைகள் மட்டுமே வீட்டில் இருந்தனர். இரவு முழுவதும் திண்ணையில் அமர்ந்தவாறு வீட்டிலிருந்து ஆயுதங்களை கொண்டு காவல் பணியை செய்து வந்தார்கள். மேலும் மார்க்க உணர்வு மிகவும் மேலோங்கி இருந்தத. அப்போது நடந்த குழப்பங்களின்போது மக்கள் அவர்களிடம் உங்களது வீட்டிற்கு வெளியில் அஹ்மதிய்யா நூலகம், பேனர் உள்ளது. அதனை எடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். அதில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோளும் எழுதப்பட்டிருந்தது. அதற்கு அவர்கள் இது அப்படியே தான் இருக்கும். நாங்கள் யாருக்கும் பயந்து இதனை எனது கைகளால் அகற்ற மாட்டேன் என்று கூறினார்கள். மேலும் லஜ்னாவுடைய சதர் ஆக 1974 முதல் 1975 வரை தொண்டாற்றினார்கள். அஹ்மதி மற்றும் அஹ்மதியல்லாத குழந்தைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுத் தந்தார்கள். ஜமாஅத் அமைப்புடனும், கிலாஃபத் அமைப்புடனும் தொடர்பு கொண்டிருப்பதைப் பற்றி குறிப்பாக அறிவுறுத்தி வந்தார்கள். இவர்களுக்கு 3 மகன்களும் 2 மகள்களும் உள்ளனர். இவர்களது ஒரு மகன் நமது வக்ஃபே ஸிந்தகி முபாரக் அஹ்மத் ஸஃபர் சாஹிப் ஆவார். இவர் இலண்டனில் Additional Wakeelul Mal ஆவார்கள். மற்றொருவர் முபஷ்ஷிர் அஹ்மத் ஸஃபர் சாஹிப். இவரும் வக்ஃபே ஸிந்தகி ஆவார். இவர் தமது சர்வீஸிற்குப் பிறகு வக்ஃப் செய்துள்ளார்.

அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக! மர்ஹூமுடைய தர்ஜாவை உயர்த்துவானாக. நான் கூறியது போன்று தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா தொழுகை தொழப்படும்.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 10.02.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456